# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2023 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க,*
## உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

---

[*2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2023*, செத்தெம்பர் மாதம் *08* ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *12.00*** **தபாற் செலவு : ரூபா *150.00***

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

***2023 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்***

*[2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]*

*ச.வ.- ஓ. 45/2023*

***2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்*

***1.*** *(1) இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள், 2023, ஏப்பிறல் 1 ஆந்தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.*

*2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்துக்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்*

***2.*** *இரண்டாயிரத்துப் பதினேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தின் முதலாம் அட்டவணை, அவ்வட்டவணையின் 8 ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-*

***"8. ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம், சகாய, ஓய்வூதிய அல்லது பணிக்கொடை நிதியங்கள் மற்றும் முடிவுறுத்துகை நிதியங்களுக்கான வரி வீதங்கள்.***

*(1) 2022, ஏப்பிறல் 1 ஆந்தேதியன்று அல்லது அதற்கு முன்னர் தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டொன்றுக்காகவும் மற்றும் 2023, ஏப்பிறல் 1 ஆந்தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் முதலாவது ஆறுமாத காலப்பகுதிக்காகவும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், அங்கீகரிக்கப்பட்டதொரு சகாய*

அல்லது ஓய்வூதிய நிதியம் அல்லது அங்கீகரிக்கப் பட்டதொரு முடிவுறுத்துகை நிதியத்தின் வரிவிதிக்கப் படற்பாலதான வருமானம் 14% சதவீதத்தில் வரிவிதிக் கப்படுதல் வேண்டும்.

(2) மூன்றாம் மற்றும் (4) ஆம் உட்பந்திகளுக்கமைய, 2023, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் இரண்டாவது ஆறுமாத காலப்பகுதிக்காகவும் மற்றும் 2024, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண் டுக்காகவும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம், அங்கீகரிக்கப்பட்டதொரு சகாய அல்லது ஓய்வூதிய நிதியம் அல்லது அங்கீகரிக்கப்பட்டதொரு முடிவுறுத் துகை நிதியத்தின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் 14% சதவீதத்தில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்.

(3) 2023, ஏப்பிறல் 1 ஆந்தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் இரண்டாவது ஆறுமாத காலப்பகுதிக்காகவும் மற்றும் 2024, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டுக்காகவும் திறைசேரி முறிகளிலிருந்து ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம், அங்கீகரிக்கப்பட்டதொரு சகாய அல்லது ஓய்வூதிய நிதியம் அல்லது அங்கீகரிக்கப்பட்டதொரு முடிவுறுத் துகை நிதியத்தினால் பெறப்பட்ட அல்லது பெற்றுக் கொள்ளப்பட்ட ஈட்டுகைகளினதும் மற்றும் இலாபங் களினதும் அத்தகைய பாகம் 30% சதவீதத்தில் வரி விதிக்கப்படுதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பந்தியின் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம், அங்கீகரிக்கப்பட்டதொரு சகாய அல்லது ஓய்வூதிய நிதியம் அல்லது அங்கீகரிக்கப்பட்டதொரு

முடிவுறுத்துகை நிதியம் தகவுடைய முறிகளில் முதலீடு செய்திருந்தால் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பகிரங்க தனிசுப் பகுதியின் பதிவாளர் அத்தகைய ஏதேனும் நிதியம் 2023, யூலை 1 ஆந் தேதிய தீர்மானத்தினால் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு தனிசு உச்சவளவினதாக்குகைச் செயன் முறையில் பயனுள்ளவகையில் பங்கேற்றுள்ளதென உறுதிப்படுத்தினால், 2023, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் இரண்டாவது ஆறுமாத காலப்பகுதிக்காகவும் மற்றும் 2024, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டுக்காகவும் திறைசேரி முறிகளிலிருந்து அத்தகைய நிதியங்களினால் பெறப்பட்ட அல்லது பெற்றுகொள்ளப்பட்ட ஈட்டுகைகளினதும் மற்றும் இலாபங்களினதும் அத்தகைய பாகம் 14% சதவீதத்தில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்.

(5) இப்பந்தியில் -

''அங்கீகரிக்கப்பட்ட முடிவுறுத்துகை நிதியம்'' என்பது, எந்த சிக்கன, சேமிப்பு அல்லது கட்டட சங்கத்திற்கு அல்லது சேமநல நிதியத்திற்கு ஊழியர்களினால் மாத்திரம் உதவுதொகைகள் செலுத்தப்படுகின்றனவோ அந்த ஏதேனும் சிக்கன, சேமிப்பு அல்லது கட்டட சங்கம் அல்லது சேமநல நிதியம் என்று அல்லது 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ், ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டதும் ஊழியர்களின் சேவை முடிவுறுத்துகையின் மீது அவ்வூழியர்களுக்கு பணிக்கொடைகளைச்

செலுத்தும் நோக்கத்துக்காகப் பேணப்பட்டதுமான ஏதேனும் பணிக்கொடை நிதியம் என்று பொருள்படும்;

''பயனுள்ளவகையில் பங்குபற்றியமை'' என்பது, 2023 ஆம் ஆண்டில் முதிர்வடைகின்ற தகவுடைய முறிகளின் ஒவ்வொரு தொடரினதும் மொத்த வைத்திருக்கையின் 50% சதவீதத்திற்குக் குறையாமலும் மற்றும் 2024 முதல் 2032 வரையிலான பஞ்சாங்க ஆண்டுகளில் (இரண்டு முட்பட) முதிர்வடைகின்ற தகவுடைய முறிகளின் மொத்த வைத்திருக்கையின் 100% சதவீதத்துக்காகவும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம், அங்கீகரிக்கப்பட்டதொரு சகாய அல்லது ஓய்வூதிய நிதியம் அல்லது அங்கீகரிக்கப்பட்டதொரு முடிவுறுத்துகை நிதியத்தினாலான முனைவுகளின் சமர்ப்பிப்பு மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பகிரங்கத் தனிசுப் பகுதியின் பதிவாளரினால் அத்தகைய முனைவுகளின் ஏற்பு என்று பொருள்படும்; அத்துடன்

''தகவுடைய முறிகள்'' என்பது, (420 ஆம் அத்தியாயமான) பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதிகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட உள்நாட்டுத் தனிசு உச்சவளவினதாக்குகை நோக்கங்களுக்காக ஏற்புடையற்பாலனவான திறைசேரி முறிகள் எனப் பொருள்படும்; அவை-

"(அ) (2023, யூலை 15 ஆந் தேதியன்றும் 2023, செத்தெம்பர் 1 ஆந் தேதியன்றும் முதிர்வடைகின்ற திறைசேரி முறிகள் நீங்கலாக) 2023, யூன் 28 ஆந் தேதிக்கும் 2023, திசெம்பர் 31 ஆம் தேதிக்கும் இடையே முதிர்வடைகின்றவையாகவும்; அத்துடன்

(ஆ) 2024 முதல் 2032 வரையிலான பஞ்சாங்க ஆண்டுகளில் (இரண்டுமுட்பட) முதிர்வடைகின்றவையாகவும், இருக்கும்.

(6) இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாட்டில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இப்பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் நிதியம் 2023, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டுக்காகச் செலுத்தப்படற்பாலதான வருமான வரியை கணிப்பதற்காக பன்னிரெண்டு மாதங்களைக் கொண்டவொரு மாற்றுக் காலப்பகுதியின் அடிப்படையில் கணக்குகளைப் பயன்படுத்துகின்றவிடத்து, இப்பந்தியில் தரப்பட்ட வருமான வரி வீதங்கள், பன்னிரெண்டு மாத காலப்பகுதியைக்கொண்ட அத்தகைய மாற்றுக் காலப்பகுதியைக் கவனத்துட்கொள்வதன் மூலம் அத்தகைய வரிமதிப்பீட்டாண்டுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.".

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை “பிரகாசன பியச”, அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*